DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-4/2020

Prosecution witness – PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.முருகவேல் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1, A2 absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed.)

19.05.2026 – 11.50 PM

<u>முதல் விசாரணை:–</u>

1. நான் ஆப்பனூரில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 உள்ளூர் காரர் தான். எங்கள் ஊரிலிலுள்ள ஸ்ரீ பீலிக்கான் முனீஸ்வரர் கோவிலில் அ.சா.1 பூசாரியாக இருந்து வருகிறார். 27.02.2018ம் தேதியன்று காலை 07.00 மணியளவில் அ.சா.1 போன் மூலமாக எனக்கு தொடர்பு கொண்டு கோவிலில் பூட்டு உடைக்கப்பட்டு உண்டியல் களவு செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்தார். நான் உடனடியாக கிளம்பி கோவிலுக்கு சென்று பார்த்தேன். உண்டியல் கிடைக்கவில்லை. அதனால் அ.சா.1 ஊர்க்காரர்களை கலந்து ஆலோசித்து விட்டு கடலாடி காவல் நிலையம் சென்று புகார் அளித்தார். நானும் உடன் சென்றேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

போலீசார் என்னை விசாரித்தனர். காவல்நிலையத்தில் வைத்து 27.02.2018ம்தேதியன்று புகார் கொடுக்க அ.,சா.1 உடன் சென்றபோது போலீசார் என்னை விசாரித்தனர். எனக்கு அ.சா.1 காலை 07.00 மணியளவில் தகவல் அளித்தார். நான் ஒரு 10 நிமிடத்திற்குள் கோவிலுக்கு சென்று விட்டேன். எனக்கு சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றாலும்., அ.சா.1 கூறிதான் தெரிந்து கொண்டேன் என்றாலும் சரிதான். உண்மையில் எங்கள் கோவிலில் அ.சா.1 கூறியபடி உண்டியல் களவு போகவில்லை என்றாலும், அவ்வாறு களவு

போய் இருந்தால் போலீசார் கைப்பற்றி இருப்பார்கள் என்றாலும் சரியல்ல. அ.சா.1 தெரிந்தவர் என்பதால் அவர் அளித்த பொய் புகாரை அனுசரித்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/G.தங்ககார்த்திகா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ)
கடலாடி